5

# Diaspora's Contribution in Social Services: A Sociological Study based on J/69 Grama Niladhari Division, Gurunagar

**Vegini Gnanenthiran**
*School of social work ,National Institute of Social Development*
*Liyanagemulla, Seeduwa, Srlanka.*
*Tel :+94112882506/07, Email :Info@nisd.ac.lk*

***ABSTRACT***

*They Tamil Diaspora have the tendency to maintain transnational involvement with their own country people in many ways. Many organizations and institutions provide social services with the participation of Tamil Diaspora community in Sri Lanka. The Diaspora engages in service-oriented activities in North and many parts of the East. They also have different social interests for the benefit of their people. The main aim of this study is to investigate the contribution of Tamil Diaspora to the social services of the Gurunagar J/69 Grama Niladhari Division. Mixed method approach was used for this study employing snowballing sampling method. A total of hundred samples was selected from the beneficiaries who got the diaspora's assistance in the GN Division. Primary data was collected through the interviewer administered questionnaire, case study methods, focus group discussion and, key informant interviews methods. Qualitative data were analyzed thematically. Quantitative data was analyzed using a descriptive statistical method with the support of SPSS. Results of this study showed, the Diaspora provide s assistance for the education, professional assistance, contributions to Religious affairs, contribution of community level organizations and assistances to the needy people. Almost 23% of respondents said that diaspora have special concern on the educational supports. About 98% of respondents said that social services also contributed to the development of the community. In the study area, Diasporas focus on their birth place, which plays an important role in promoting social services through the organizations run with the contribution of Diasporas.*

***Key words:*** Philanthropy; Social Services; Tamil Diaspora; Transnational involvement

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் தமிழர் நலன்சார்ந்து புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் பல நிறுவனங்கள், அமைப்புக்களும் சமூக சேவைகளை ஆற்றி வருகின்றன. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சொந்த நாட்டினர் உடனான நாடுகடந்த தொடர்புகளைப் பல வழிகளிலும் பேணி வரும் போக்கு காணப்படுகின்றது. எனவே புலம்பெயர்ந்தோர் தமது பிறந்த இடங்களின் நலன்கருதி பல்வேறு சமூக சேவைகள் சார்ந்த செயற்பாடுகளை வடக்கு மற்றும் கிழக்கின் பல பகுதிகளில் மேற்கொண்டு வருகின்றனர். அந்தவகையில் இந்த ஆய்வானது சமூக சேவைகளை வழங்குவதில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்களை மதிப்பிடுவதனை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாணம் குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலப்பு முறையினைப் பயன்படுத்தி குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவில் புலம்பெயர்ந்தோரின் உதவிகள் மூலம் பயன்பெற்ற நபர்களை அடிப்படையாகக் கொண்டு பனிப்பந்து மாதிரி எடுப்பு முறையில் 100 பேர் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டு நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து முறை, குவிமையக் குழுக் கலந்துரையாடல், விடய ஆய்வு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், நேரடி அவதானம் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டும், பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்வு முறைக்கும் அளவு ரீதியிலான தரவுகள் விவரண புள்ளிவிபர ரீதியான முறையில் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியை SPSS பயன்படுத்தியும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகளாக புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகளாக கல்விக்கான உதவிகள், தொழில்சார் உதவிகள், சமயசார் விடயங்களுக்கான பங்களிப்புக்கள், சமுதாய மட்ட அமைப்புக்களுக்கான பங்களிப்புக்கள், ஆதரவற்றோருக்கான உதவிகள் போன்ற வழங்கப்படுகின்றது. கல்விக்கான உதவிகள் தொடர்பில் புலம்பெயர்ந்தோர் அதிக கவனம் செலுத்துவதாக 23% ஆனோர் குறிப்பிட்டுள்ளனர். இங்கு முன்னெடுக்கப்படும் சமூக சேவைகள் சமுதாய அபிவிருத்திக்கான பங்களிப்பினையும் வழங்கியுள்ளதாக 98% ஆனவர்கள் குறிப்பிட்டுள்ளனர். புலம்பெயர்ந்து வாழ்வர்கள் தாம் பிறந்து வளர்ந்த சொந்த இடத்தின் மேம்பாடு குறித்து கவனம் செலுத்தி வருகின்றனர். புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் இயங்கும் அமைப்புக்கள் ஆய்வுக்குட்படும் பகுதியில் சமூக சேவைகளை முன்னெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**திறவுச்சொற்கள் : பரோபகாரம்; புலம்பெயர் தமிழர்கள்; நாடுகடந்த ஈடுபாடு; சமூக சேவைகள்**

## ஆய்வு அறிமுகம்

புலம்பெயர்தல் என்பது Diaspora என்ற கிரேக்கச் சொல்லினை அடியொற்றிக் கையாளப்படும் சொல்லாகும். மக்கள் தாம் வாழும் நாட்டிலிருந்து வலிமையான தள்ளுவிசையின் காரணமாக பிற நாடுகளுக்குச் சென்று சிதறி வாழ்வதைக் குறித்து நிற்கின்றது. அதாவது சொந்த தாய் நிலத்தை விட்டு வேறொரு நாட்டிற்குச் சென்று வாழ்வதாகும். இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள இனங்களிடையே வெவ்வேறுபட்ட சித்தாந்தங்களின் உருவாக்கத்தினால் இனரீதியிலான முரண்பாடுகள், வன்முறைகள், யுத்தம் விரட்டியடிப்பு போன்றவற்றின் விளைவாக இலங்கைத் தமிழர் சர்வதேச நாடுகளில் தஞ்சம் புக நேரிட்டது, இதனை புலம்பெயர்தல் என்றும் அவ்வாறு புலம்பெயர்ந்தோரை புலம்பெயர்வாளர்கள் என்றும் அழைக்கின்றனர் (குகபாலன், 2019). இவ்வாறு புலம்பெயர்ந்து வாழ்வர்களினால் தாம் பிறந்து வளர்ந்த சொந்த இடத்தின் மேம்பாடு குறித்து கவனம் செலுத்தும் தன்மைகள் தொடர்பில் வெவ்வேறு நாட்டு அனுபவங்கள் மூலம் வெளிப்படுகின்றது. உலகின் பல பாகங்களில் பல்வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்வோர் தமது சொந்த நாடுகளின் அபிவிருத்திக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றனர். இந்தியாவின் புலம்பெயர்ந்து வாழ்வோரின் பொருளாதார திறனை அதிகரிக்க அந்நாடு பல கொள்கைகளையும் கொண்டு காணப்படுகின்றது. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு புலம்பெயர்ந்தவர்களினால் கணிசமான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது (Mishra, 2016). எனவே உலகளவில் புலம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த நாட்டின் மீதான பற்று காரணமாக பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.

இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் இனத்தவர்களிடையிலான உள்நாட்டு யுத்தத்தின் நிமித்தம் பல்லாயிரக்கணக்கான வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளில் வாழந்து வருகின்றனர். இவர்கள் தமது தமிழர் தாயகப் பகுதிகளுக்கு போர் நடைபெற்ற காலம் தொடக்கம் இன்று போர் முடிவுற்று பதினொரு ஆண்டுகள் கழிந்தும் தமது பங்களிப்புக்களை செய்து வருகின்றனர். இலங்கையில் போருக்குப் பின்னர் புலம்பெயர்ந்தோரினால் செய்யப்படும் செயற்பாடுகள் புதிய உயரங்களை எட்டியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது (Pande, 2016). யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாஷையூர் கிழக்கு கிராமத்தில் புலம்பெயர்ந்தவர்கள் குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, அவுஸ்ரேலியா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருபவர்களினால் அக் கிராமத்துக்கு வைத்தியசாலை நடாத்துதல், சிறுவர் கல்வி, இரவு நேரப் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள், சமய நிகழ்வுகள் மற்றும் கலாசார செயற்பாடுகளுக்கான உதவிகள், தொழில் சார் உதவிகளாக மீன்பிடிக் கருவிகள் கொள்வனவிற்கான உதவிகள் எனப் பல்வேறுபட்ட சமூக சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது (ஜயதிலக மற்றும் பலர், 2016). எனவே இங்கு ஆய்வுக்குட்பட்டுள்ள குருநகரில் J/69 கிராம சேவகர் பிரிவிலும் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புடன் தமது பிறப்பிட சமுதாயத்திற்கு கல்வி, தொழில் பயிற்சி அளித்தல், சமூக மையங்கள் அமைத்தல், ஆலயங்கள் புனரமைப்பு, விளையாட்டு போன்ற பல்வேறு சமூக சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே இந்த ஆய்வானது புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகள் தொடர்பில் ஆராய்வதில் கவனம் செலுத்தியுள்ளது.

## இலக்கிய மீளாய்வும் புதிய அறிவிற்கான பங்களிப்பும்

புலம்பெயர்தோரினால் யாழ்ப்பாணம் பாஷையூர் கிழக்கு கிராமத்துக்கு ஏராளமான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றது. அந்தவகையில் கல்விசார் உதவிகளாக புலம்பெயர்ந்தோரினால் சிறுவர் கல்வி, இரவு நேரப் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவிகள் போன்றன வழங்கப்படுகின்றது. மேலும் தொழில் முயற்சிகளுக்கான உதவிகள், சமய மற்றும் கலாசார விடயங்களுக்கான உதவிகள் போன்ற பல சேவைகளுக்கான உதவிகள் புலம்பெயர்ந்தோரினால் வழங்கப்படுகின்றது (ஜயதிலக மற்றும் பலர் 2016). குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவினிலும் புலம்பெயர்ந்தோரினால் கல்வி, தொழில், ஆன்மீக விடயங்களுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றது. எனவே இவ்விடயம் மேற்குறிப்பிட்ட இரு ஆய்வுகளிலும் புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகளுடன் தொடர்புபட்டுள்ளதாக உள்ளது. எனவே இந்த விடயம் இரு ஆய்வுகளிலும் தொடர்புபட்டுள்ளது.

ஆய்வானது யாழ்ப்பாண தீபகற்பத்தில் புலம்பெயர்ந்தோர் நிதிப்பங்களிப்பில் பரிசாக கட்டப்பட்ட கோயில்கள் அதன் சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. யாழ்ப்பாண தீபகற்பத்தில் புலம்பெயர்ந்தோர் நிதியளித்துக் கட்டப்பட்ட கோயில் பரிசுகளின் தாக்கத்தை நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது (Hollenbach, Thurirajah & Subramaniam, 2020). குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வானது புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் ஆலயபுனரமைப்பு பணிகள், திருவிழாக்கால உதவிகள் போன்றவை புலம்பெயர்ந்தோரின் உதவியில் மேற்கொள்ளப்படுகின்றது என்ற விடயத்தை வலியுறுத்தி நிற்பது புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடனான உதவிகளின் தாக்கமாகவே உள்ளது எனும் விடயம் மேற்குறிப்பிட்ட ஆய்வுடன் தொடர்புபட்டு அமைந்துள்ளது. மேலும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்பில் கட்டப்பட்ட கோயில் பரிசுகளின் தாக்கத்தை மட்டும் ஆராய்கின்றது ஆனால் இங்கு மேற்கொள்ளப்படவுள்ள ஆய்வானது சமூக சேவைகளில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடனான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தும் தன்மையானது மேற்குறிப்பிட்ட ஆய்வின் இடைவெளியினை பூர்த்தி செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கென்யாவிலிருந்து புலம்பெயர்ந்தோர் டன்சானியா, உகண்டா, ஐக்கிய ராஜ்ஜியம், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வசித்து வருகின்றனர். கென்யாவின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு கென்ய புலம்பெயர்ந்தோர் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்கின்றனர். சுவீடனில் உள்ள கென்யர்கள் பல ஆண்டுகளாக அந்தவகையில் தன்னார்வ வருகைகள், தனிப்பட்ட முதலீட்டு முயற்சிகள், பணம் அனுப்புதல், சமூக திட்டங்களுக்கு பங்களித்தல், அறிவு மற்றும் அனுபவ பகிர்வுகள் போன்றவற்றை மேற்கொள்கின்றனர் (Wasike , 2010) . அந்தவகையில் குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்விலும் புலம்பெயர்ந்தோர் சமூக சேவைகளினை மேற்கொள்ள பல அமைப்புக்கள் மற்றும் கழகங்களுக்கு பணம் அனுப்புதல் மூலமாக சமூக ரீதியிலான விடயங்களை மேற்கொள்ள உதவுகின்றனர் எனும் விடயம் மேற்குறிப்பிட்ட ஆய்வுடன் தொடர்புபட்டுள்ளது.

ஆய்வானது சமுதாய மேம்பாட்டுக்கு புலம்பெயர்ந்த சமூக தொழில் முனைவோரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டள்ளது. இந்த ஆய்வின் நோக்கம் சமூக தொழில் முனைவோரின் பண்புகளை கண்டறிந்து நன்கொடை வழங்குபவர்களிடமிருந்து வேறுபடுத்துகின்றது. இந்தியாவின் பஞ்சாபிலிருந்து 19 ஆம் நூற்றாண்டில் வடஅமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்தவர்கள் தமது மூதாதையர் வாழ்ந்த இடங்களை அபிவிருத்தி செய்வதில் அவர்களின் தலையீடுகள் தொடர்ந்து காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது புலம்பெயர்ந்தோர் தமது கிராம மேம்பாட்டுக்கு நிதி ஆதாரங்களை வழங்குவது மட்டுமல்ல புதிய யோசனைகள், நவீன அணுகுமுறைகள், தொழில்நுட்ப விடயங்களையும் வழங்குவதன் மூலம் கிராமப்புற சமூகங்களையும் அதன் அமைப்புக்களையும் நவீனமயமாக்க அவை பங்களிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (Dhesi, 2016). குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்விலும் புலம்பெயர்ந்தோர் சமுதாய மட்ட அமைப்புக்களுக்கு தமது யோசனைகளை வழங்கி புதிய செயற்பாடுகளை ஊக்குவிக்கும் தன்மை காணப்படுகின்றது அத்துடன் நிதி ஆதாரங்களையும் வழங்குகின்றனர் எனும் விடயம் மேற்குறிப்பிட்ட ஆய்வுடன் தொடர்புபட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வுக்காக குருநகர் J/69 கிராம சேவகர் பிரிவானது தெரிவு செய்யப்பட்டு கணியம்சார் மற்றும் பண்புசார் ஆய்வு நுட்பங்கள் இணைந்த கலப்புமுறை (Mixed method) ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் மாதிரி எடுப்பு முறை ஆனது J/69 கிராம சேவகர் பிரிவிலிருந்து புலம்பெயர்ந்தோர் உதவியினால் பயன்பெற்ற மக்களை அடிப்படையாகக் கொண்டு பனிப்பந்து மாதிரி எடுப்பு முறையில் ஆய்வுப் பகுதியில் நிரந்தரமாக வசித்து வரும் 100 பேர் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வில் J/69 கிராம சேவகர் பிரிவினை பிறப்பிடமாகக் கொண்டுள்ளவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இங்கு முதலாம் நிலைத் தரவுகள் ஆக நேரடி அவதானம், நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், குவிமையக் குழுக் கலந்துரையாடல், விடய ஆய்வுகள் போன்றவையும் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் மூலமான தரவுகள், யாழ்ப்பாண பிரதேச செயலக தரவுகள், ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய தகவல்களைக் கொண்ட நூல்கள், இணையத்தளம் மூலமான தகவல்கள் போன்றவை மூலம் தரவு சேகரிக்கப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தரவுகள் மற்றும் தகவல்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் ரீதியான பகுப்பாய்வு முறைக்கும் அளவு ரீதியிலான தரவுகள் விவரண புள்ளிவிபர ரீதியான முறையில் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியை SPSS பயன்படுத்தியும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு ஒழுக்கவியல் ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் ஆராய்தலும்**


**அட்டவணை 1: சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள்**

| **சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள்** | | **எண்ணிக்கை** | **வீதம்%** |
|---|---|---|---|
| வயது (வருடங்களில்) | | | |
| | 18-28 | 19 | 19.0 |
| | 29-38 | 20 | 20.0 |
| | 39-48 | 28 | 28.0 |
| | 49-58 | 11 | 11.0 |
| | 59-68 | 13 | 13.0 |
| | 69-78 | 8 | 8.0 |
| | 79-88 | 1 | 1.0 |
| மொத்தம் | | 100 | 100.0 |
| பால்நிலை | | | |
| | ஆண் | 70 | 70.0 |
| | பெண் | 30 | 30.0 |
| மொத்தம் | | 100 | 100.00 |
| சமயம் | கத்தோலிக்கம் | 100 | 100.0 |
| மொத்தம் | | 100 | 100.0 |
| கல்விநிலை | | | |
| | தரம் 1 -5 வரை | 21 | 21 |
| | தரம் 6 -11வரை | 63 | 63.0 |
| | க.பொ.த உயர்தரம் | 15 | 15.0 |
| | பல்கலைக்கழகம் | 1 | 1.0 |
| மொத்தம் | | 100 | 100.0 |
| தொழில் | மீன்பிடி | 67 | 67.0 |
| | வியாபாரம் | 3 | 3.0 |
| | அரச பணி | 1 | 1.0 |
| | தனியார் துறை | 1 | 1.0 |
| | தொழில் புரியவில்லை | 28 | 28.0 |
| | மொத்தம் | 100 | 100.0 |

(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து 2021)

சமூக சேவைகளை வழங்குவதில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு எனும் ஆய்வில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களின் சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 28% ஆனோர் 39-48 வயதுப்பிரிவினர்கள். ஆண்கள் 70.0% ஆக உள்ளனர். 100% ஆனர்வர்களும் உரோமன் கத்தோலிக்க சமயத்தை பின்பற்றுபவர்களாக உள்ளனர். ஆரம்பக் கல்வியினை 21% ஆனவர்களும் இடைநிலைக் கல்வியினை 63.0% ஆனவர்களும் க.பொ.த உயர் தரத்தினை 15% ஆனவர்களும் பல்கலைக்கழக கல்வியினை 1% ஆனவர்களும் பூர்த்தி செய்துள்ளனர். உள்ளனர். பெரும்பாலானோர் ஆதாவது 67% ஆனவர்கள் மீன்பிடியினை தமது தொழிலாகக் கொண்டு காணப்படுகின்றனர்.

**வரைபு 1 : புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் இயங்கும் கழகங்கள்**




(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, 2021)

வரைபு 1 இன் ஊடாக புலம்பெயர்நதோர் பங்களிப்புடன் பல்வேறு கழகங்கள் இயங்குகின்றன என்பதனை விளங்கிக் கொள்ள முடிகின்றது. கல்வி முன்னேற்றக் கழகம் - பிரான்ஸ், குருநகர் சமூக சேவை அமைப்பு - ஜேர்மன், குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன் - ஒஸ்லோ, சமூக சேவை அமைப்பு – கனடா, அமெரிக்கா, புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம், ஜேர்மன் குருநகர் விளையாட்டுக் கழகம் போன்றவவை இயங்குகின்றன என ஒவ்வொரு கழகங்கள் பற்றியும் 100% ஆனோரும் அவை இயங்குகின்றன எனக் குறிப்பிட்டுள்ளமையை வரைபு வெளிப்படுத்தியுள்ளது. எனவே இந்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகளும் அமைந்துள்ளன. *"கிராமத்தில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புடன் .இங்கு கழகங்கள் பல ஆண்டுகளாக இயங்கி வருதாகவும் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் கல்வி முன்னேற்றக் கழகம் - பிரான்ஸ்,குருநகர் சமூக சேவை அமைப்பு - ஜேர்மன், குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன் - ஒஸ்லோ, சமூக சேவை அமைப்பு – கனடா,அமெரிக்கா, புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம், ஜேர்மன் குருநகர் விளையாட்டுக் கழகம் போன்ற கழகங்கள் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்னர். குருநகர் சமூக சேவை அமைப்பு இங்கு 1994 தொடங்கப்பட்டது எனவும் கனடா - அமெரிக்கா சமூக சேவை அமைப்பானது கனடாவில் 1996 தொடங்கப்பட்டாலும் 2002 இங்கு ஆரம்பிக்கபட்டதாகவும் தெரிவித்தனர்.."*(குவிமையக் குழுக் கலந்துரையாடல்).


*"புலம்பெயர் நாடுகளின் பெயர்களைக் கொண்ட அமைப்புக்கள் பல காணப்படுகின்றது. அதாவது கல்வி முன்னேற்றக் கழகம் பிரான்ஸ், குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் பேர்கன் - ஒஸ்லோ, கனடா - அமெரிக்கா சமூக சேவை அமைப்பு, புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம், ஜேர்மன் குருநகர் விளையாட்டுக்*

*கழகம் போன்றவை காணப்படுகின்றது…"* (*பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் 01)*

*"இஞ்ச எங்கட இடத்தில இருந்து போன நிறைய பேர் வெளிநாட்டில எங்கட ஊரின் பெயர்ல கழகங்களை தொடங்கி அங்க உள்ள எங்கட ஆட்களுட காசுகளைச் சேர்த்து இங்க உள்ள எங்கட சனத்துக்கு நிறைய உதவிகள் செய்து வறாங்கள்…."* (*விடய ஆய்வு 03 )* .

எனவே மேற்குறிப்பிட்ட பண்புசார் தரவுசேகரிப்பு மூலங்களான குவிமையக் குழுக் கலந்துரையாடல், பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் 01, விடய ஆய்வு 03 போன்றவற்றில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்பில் இயங்கும் கழகங்கள் அமைப்புக்கள் தொடர்பான விடயங்களைக் விளக்கி நிற்பதோடு குவிமையக் குழுக் கலந்துரையாடலில் அக் கழகங்கள் சில தோற்றம் பெற்ற ஆண்டுகள் பற்றிய விபரத்தையும் குறிப்பிடுகின்றது ஆனால் பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் 01, விடய ஆய்வு 03 போன்றவை ஆண்டு விபரம் தொடர்பில் குறிப்பிடவில்லை என்பதும் இவற்றுக்கிடையிலான வேறுபடும் அம்சமாக உள்ளது. அத்துடன் விடய ஆய்வு 03 இல் இயங்கும் கழகங்கள் அல்லது அமைப்புக்களின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறப்படாத நிலை காணப்படுகின்றன. அத்துடன் வரைபு 01 காட்டி நிற்கும் கணியம்சார் தரவுகளை நிரூபிக்கும் வகையில் பண்புசார் தரவுகளும் அமைந்துள்ளன. சில புலம்பெயர் நாடுகளில் உள்ள இரு நாட்டினர் இணைந்தும் கழகங்கள் ஆரம்பித்து செயல்படுத்தி வருகின்றனர். அதாவது சமூக சேவை அமைப்பு கனடா, அமெரிக்கா இரு நாடுகளிலும் உள்ள புலம்பெயர் உறவுகள் தமது ஊரின் நலனுக்காக இணைந்து பல சமூக சேவைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். புலம்பெயர்ந்தோர் தமது சொந்த ஊரின் நலனுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவே இவ்வாறான கழகங்களை உருவாக்கி பல செயற்பாடுகளை அவற்றின் மூலம் செய்கின்றனர்.

**வரைபு 02: புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் இடம்பெற்று வரும் சமூக சேவைகள்**




(மூலம் : களஆய்வு, வினாக்கொத்து, 2021)

புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புடன் ஆய்குட்படும் கிராம சேவகர் பிரிவினில் இடம்பெற்று வரும் சமூக சேவைகள் தொடர்பில் வரைபு 02 இன் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது. அந்தவகையில் கல்விக்கான உதவிகள், தொழிலுக்கான உதவிகள் ஆலயங்கள் மற்றும் அதனுடன் இணைந்த பொது விடயங்களுக்கான உதவிகள், கிராம சனசமூக நிலையங்களுக்கான உதவிகள், ஆதரவற்றோர் பராமரிப்புத் தொடர்பான உதவிகள் போன்றன வழங்கப்படுகின்றது. அதிகமானவர்கள் அதாவது 23.0% ஆனவர்கள் கல்விக்கான உதவிகள் வழங்கப்படுகின்றது எனவும் குறைந்தளவிலானோர் அதாவது 11.2% ஆதரவற்றவர்களுக்கான உதவிகள் வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே இங்கு பல்வகைப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதுடன் இந்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகளும் அமைந்துள்ளது,

*“எங்கட ஊரின் பெயர்ல கழகங்களை தொடங்கி அங்க உள்ள எங்கட ஆட்களுட காசுகளைச் சேர்த்து இங்க உள்ள எங்கட சனத்துக்கு நிறைய உதவிகள் செய்து வறாங்கள். இங்க ஜேர்மன் கழகத்தால இலவசமாக எங்கட ஊர்ப் பிள்ளையளுக்கு ரீயூசன் பின்ரேத்தில இருந்து இரவு எட்டு மணி வரை நடக்கிறது…”(விடய ஆய்வு 03 ).*

*“எமது கழகத்தின் பெயர் புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம் ஆகும். இது 2001 இல் ஆரம்பிக்கப்பட்டது. இக் கழகம் எமது ஊரைச் சேரந்தவர்களால் சுவிஸிலும் இயங்கி வருகின்றது. அவர்களின் நிதி உதவிகள் மூலம் இங்கு பல செயற்பாடுகள் செய்யப்படுகின்றது. அதாவது விதவைகளுக்கு 5000 நிரந்தர வைப்பிலிடப்பட்டு குறிப்பிட்ட காலத்தின் பின் அவர்கள் அவர்கள் மீண்டும் வட்டியுடன் எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. A/L படிக்கும் வறிய மாணவர்களுக்கான ரியூசனுக்காக பணம் செலுத்தப்பட்டது. வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களின் வீட்டில் மரணச் சடங்குகள் ஏதேனும் நிகழ்ந்தால் அவர்களுக்கு 5000 இப்போதும் வழங்கி வருகின்றோம். 70 மேற்பட்ட அங்கவீனர்களுக்கு ஒவ்வொரு வருடமும் வங்கியில் 6000 வைப்பிலிடப்பட்டு வருகின்றது….”(பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் 02).*

*“எங்கட ஊரில வெளிநாட்டுக்கார உதவியால இங்கு ஊருக்குள்ள உள்ள பள்ளிக் கூடங்களை முன்னேற்ற பண உதவியள் செய்றவங்க அதுமட்டுமல்ல சனசமூக நிலையங்களுக்கான உதவிகள் தினமும் சனசமூக நிலையங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் போட பணம் அனுப்புறவங்கள், கோயிலுக்கு உதவுறவங்க…..” (விடய ஆய்வு 02).*

எனவே மேற்குறிப்பிட்ட பண்புசார் தரவு சேகரிப்பு மூலங்கள் வழியான தரவுகள் ஊடாக நோக்கும் போது புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் வரைபு 2 காட்டும் செயற்பாடுகள் அனைத்தையும் வெளிப்படுத்தி நிற்பதனால் கணியம்சார் தரவுகளை வலுப்படுத்தும் வகையில் பண்புசார் தரவுகளும் அமைந்துள்ளன. அத்துடன் ஜேர்மன் அமைப்பு கல்விசார் நடவடிக்கைகளை அதிகம் மேற்கொள்கின்றது என்பதனை விடயஆய்வு 03 குறிப்பிட்டுள்ளது. அத்துடன் புலம்பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம் கல்விசார் செயற்பாடுகளுடன் ஆதரவற்றோருக்கான உதவிகள் போன்றவற்றிலும் கவனம் செலுத்துகின்றது என பிரதான தகவல் தருனருடனான நேர்காணல் 02 ஊடாகவும் அத்துடன் விடய ஆய்வு 02 மூலம் பாடசாலைகள் மற்றும் சனசமூக நிலையங்களுக்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன. எனவே மேற்குறிப்பிட்ட பண்புசார் தரவுகள் இடையில் கல்விசார் செயற்பாடுகளை புலம்பெயர்ந்தோர் மேற்கொள்கின்றனர் எனும் விடயத்தில் ஒன்றுபட்ட கருத்து வெளிப்படுகின்றது என்பதுடன் வரைபு 2 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள கணியம்சார் தரவுகளை வலுப்படுத்தும் வகையில் பண்புசார் தரவுகளும் அமைந்துள்ளன.

**முடிவுரை**

ஆய்வுக்குட்பட்ட பகுதியில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் கழகங்கள் இயங்கி வருகின்றது. இக் கழகங்களின் செயற்பாடுகள் பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் சமூக சேவைகளை முன்னெடுப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. கழகங்கள் ஊடாக புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகளாக கல்விக்கான உதவிகள், தொழிலுக்கான உதவிகள் ஆலயங்கள் மற்றும் அதனுடன் இணைந்த பொது விடயங்களுக்கான உதவிகள், கிராம சனசமூக நிலையங்களுக்கான உதவிகள், ஆதரவற்றோர் பராமரிப்புத் தொடர்பான உதவிகள் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் மூலம் அப்பகுதி மக்களுக்கு நன்மை அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளது எதிர்காலத்தில் அவற்றினை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கு மக்களின் எதிர்பார்ப்புக்கள் நீண்டகாலத்திற்கு பயன்பெறக் கூடிய செயற்பாடுகளையே தமது சமுதாயத்திற்கு புலம்பெயர்ந்தோர் உதவிகள் மூலம் எதிர்பார்க்கின்றனர் என்ற முடிவினை தெளிவுற வலியுறுத்துகின்றது. புலம்பெயர்ந்தோரின் சமூக சேவைகள் வழியான செயற்பாடுகள் மூலம் அவர்களின் நாடுகடந்த

வலையமைப்புக்கள் பேணப்படுவதுடன் புலம்பெயர்ந்தோர் தொடர்பிலான அடையாள உருவாக்கங்களையும் அவர்களின் சொந்த இடங்களில் ஏற்படுத்துகின்றது.

**உசாத்துணை**


Dhasi, S. (2016). Diaspora social entrepreneurs and community development. International Journal Of Social Economics. Retrieved From https//www.resarcgate.net/publication/2274429404

Hollenbach, P., Thurairajah, T. ,Subramaniam, J. (2020). *Gift Of a temple: Socio-economic and cultural changes around diasporic engagement in Jaffna Peninsula, Sri Lanka*. Retrieved From https//doi.org/10.1080/09584935.2020.1819960

Mishra, A .(2016). *Diasporas Development and the Indian State, The Commonwealth journal of Affairs*. Retrieved From https//dx.doi.org/10.1080/00358533.2016.1246859

Pande, A. (2016). *Role of diasporas in home land Conflict, Conflict resolution and post-war reconstruction the case of Tamil diaspora and Sri lanka*. Retrieved From https//dx.doi.org/10.1080/19438192.2016.1236458

Wasike, R. (2018). The Role The Kenyan Diaspora in Sweden in Kenya's Economic Development.

குகபாலன், கா. (2019). *இலங்கைத் தமிழர் புலப்பெயர்வு கனடாவில் அவர்கள் வாழ்வியல்.* குரு பிறிண்டேர்ஸ்.

ஜயதிலக்க, த., அமிர்தலிங்கம், கோ., குணசேகர,ஷி., குருசாந்,ந. (2016). *ஆயுத முரண்பாடு, யுத்தத்திற்கு பின்னரான மீட்சி: இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாஷையூர் கிழக்கு கிராமத்தினைப் பற்றிய சமூகவிபர ஆய்வு*, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்.